In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : Spl.C.47/2026
Deposition of PW.13
****

Name திரு.ஜோசப்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 4th day of August 2026.

**A2 present, A1, A4 absent. Petition u/s.355 BNSS is filed and allowed.**

**முதல் விசாரணை :**

நான் 2008 ல் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக இலஞ்ச ஒழிப்பு துறை தலைமை அலுவலகம், சென்னையில் பணிபுரிந்து 20.7.2008 ல் பணிநிறைவு பெற்றேன். நான் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் 1989 முதல் 2001 வரை ஆய்வாளராக பணி செய்தேன். 26.01.2001 முதல் 02.07.2001 வரை தூத்துக்குடி ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறையில் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்தேன். நான் திருநெல்வேலி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவில் பணிபுரிந்த போது, தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் டவுண் பஞ்சாயத்து 10.03.1995 முதல் 27.01.1997 வரை பஞ்சாயத்தில் பிளம்பிங் மற்றும் மின்சார சாதனங்கள் வாங்கியதாக வாங்காமலே போலியாக ஆவணங்கள் தயார் செய்து பஞ்சாயத்து பணத்தை கையாடல் செய்ததாகவும், மற்றும் கையாடல் சம்பந்தமான இரகசியமாக கிடைத்த தகவல்களின்படி, PE.45/1996/RDTI 15.02.1999 ல் புகார் சம்பந்தமாக Preliminary Enquiry நடத்தி மேற்படி எட்டையபுரம் டவுண் பஞ்சாயத்து சம்பந்தமான ஆவணங்களை பெற்று பரிசீலித்து அதன்படி திருநெல்வேலி ஊழல் தடுப்பு குற்ற எண்.2/1999 இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 409,467,468,471 மற்றும் 477(A) மற்றும் பிரிவுகள் 13(2) உடன் இணைந்த பிரிவுகள் 13(1)(c) & (d)ன் படி ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன் படி எதிரிகள் திரு.முத்துக்குமாரசாமி, திரு.சங்கரசுப்பையா, திரு.தாமரைச்செல்வன் மற்றும்

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.04 17:44:27 +0530

திரு.ஜி.பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்து முதல் விசாரணை செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.50 ஆகும். இந்த வழக்கில் எனது முதல் விசாரணையில் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பெற கடிதங்கள் அனுப்பி வழக்கிற்கு தேவையான ஆவணங்களை பெற்றேன். ஆவணங்களை கேட்டு பெற்ற அதிகாரிகளான Executive Officer, Ettayapuram Town Panchayat, Senior Superintendent of Post Office, Kovilpatti, Accountant General, Tamilnadu, Treasury Officer,Thoothukudi. 26.01.2001 ல் நான் துணைக்கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்று தூத்துக்குடி இலஞ்ச ஒழிப்பு துறைக்கு பணியில் அமர்ந்தேன். அன்றைய தினத்திலிருந்து, 02.07.2001 வரை இந்த வழக்கின் விசாரணையை மேற்கொண்டேன். 02.07.2001 ல் நான் வேறு மாவட்டத்திற்கு மாறுதலாகியதால், ஆவணங்களை தூத்துக்குடி இலஞ்ச ஒழிப்புதுறையிடம் ஒப்படைத்து சென்றேன்.

<u>குறுக்குவிசாரணை :</u> (அனைத்து எதிரிகளுக்காக)

நான் வழக்கு கோப்பை ஒப்படைக்கும் வரை எதிரிகளான முத்துக்குமாரசாமி, சங்கரசுப்பையா, தாமரை செல்வன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் புலன் ஆய்வு அதிகாரி நான் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் சேகரித்த ஆவணங்களை வைத்து என்னிடம் ஏதும் கேட்டாரா என்றால் இல்லை. எனக்கு தனியாக 161 குவிமுச வாக்குமூலம் ஏதும் பெறவில்லை என்றால் இல்லை. என்னால் தயார் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் சங்கரன், சந்திரா, முருகேசன் ஆகியோர் பெயர்கள் இடம் பெறவில்லை என்றால் ஆமாம். Executive Officer, Ettayapuram Town Panchayat, Senior Superintendent of Post Office, Kovilpatti, Accountant General, Tamilnadu, Treasury Officer,Thoothukudi ஆகியோரிடம் பெற்ற ஆவணங்களை வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் இல்லை. இரகசிய விசாரணையின் அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்ய தேவையில்லை, பொதுவாக இரகசிய விசாரணை அறிக்கையை தாக்கல் செய்யக்கூடாது. இரகசிய விசாரணையை நான் சரியான முறையில் இந்த வழக்கில் பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த இரகசிய விசாரணையும், முதற்கட்ட விசாரணையும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. விசாரணையின் அடிப்படையில் தான் இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.04 17:44:33 +0530

என்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை எந்த காவலர் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் காவலர் 2651 திரு.முகமது ஷா இன்ஷா மூலம் அனுப்பப்பட்டது. அவருக்கு உரிய கடவுச்சீட்டு உள்ளதா என்றால் ஆமாம். வழக்கு பதியப்பட்ட காலத்தில் தாமரைச்செல்வன் இளநிலை உதவியாளராக பணியாற்றி வந்தார் என்றால் ஆமாம். தாமரைச்செல்வனுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றாலும், ஒரு தலைப்பட்சமாக என்னால் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. என்னால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>**

**இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.04 17:44:37 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**